# 26. பரம்.

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

**பொ**ன்னுலகர் மண்ணுலகர் கிம்புருடர் பம்பதியர் பூதமொடி யக்கர் முனைவர்
கின்னரர்பி சாசர்பிசி தாசனர்நி சாசரர்கெ ழூஉவரவர் சித்தர் கருடர்
மின்னழகு விஞ்சையர்விண் வாசிகளெ னாவகைவி ளம்பரிய பல்லு யிர்களின்
மன்னவவெ னக்கருள்வ ழங்கியரு ளெங்குநிறை மாகருணை கொண்ட பரமே. 1

---

9. **வியர்த்தம்** – 'வ்யர்த்தம்' என்னும் வடமொழி விகாரம்; பயனின்மை யெனும் பொருட்டு. **தோதகம்** = வஞ்சகம்; இச்சொல் "தோதகப்பெரும் பயோதரத்தியங்கு" என்னுந் திருப்புகழ்த் தொடரில் வருதலுங்காண்க.

1. **பம்பதியர்** = நக்ஷத்திர பதவியினர்; (ஷை) **பம்** = நக்ஷத்திரம். **கெழுவுதல்** = பற்று; **ழகரவெதுகை. அரவர்** = உரகர்.

**சி**ந்துவைய னந்தநதி சேருவது போற்பல திறப்படு மதத்த வர்களும்
அந்தவொரு தேவையடை வாரென வதிர்ப்பதமை யாதுநதி யாவுமொரு பேர்
சொந்தமொடு மேவியுறல் போனவைக ளென்பன துறந்தசிவ ஞானியெனும் வாய்
வந்தவர்சி வத்தையடை வாரெனை யணைத்தருள்செய் மாகருணை கொண்ட பரமே. 2

**எ**ண்மையுல காயதர்பெணாசைமலி சாருவக ரென்பவர்கள் வாயு பதமும்
வெண்மைகெழு சோதிட ருடுப்பதமு மாதவனை வேண்டுபவர் பானு பதமும்
ஒண்மைவிது வாதிக ளதன்பதமு மங்கியினை யோம்புபவர் தேயு பதமும்
வண்மையொடு சேர்வரென வேபனுவல் கூறுமெனுண் மல்குமதி தந்த பரமே. 3

**மா**மறை விருத்தமுறு கொள்கையத னாலசுசி வாமரொடி யாமளருமே
தாமதம தார்களௌள ரென்பவரும் வண்மைகிளர் தட்சிணக ளாமு கருமே
மீமருவு வண்டுறு பிசாசபத மெய்தியிடன் மெய்யென மிழற்று முதுநூல்
தோமற வெனக்கருள்பு ரிந்துகொளு மன்புடைய சுத்தசிவ மான பரமே. 4

**ஏ**ர்மிருதி வட்டையின டப்பவர்கள் கன்மநெறி யேற்றமென நிற்கு நடையார்
சார்மிக விளங்குபிர மாண்டமுத லென்றுயர்வு சாற்றிடுதன் மாத்திரை யுமால்
நீர்மைமிகு மிந்திரிய வாதிக ளதன்பதமு நேயமுட னெய்துவ ரெனாச்
சீர்மிக வணைந்தமுது நூனுவலு மென்னளி சிறந்தணைய னந்த பரமே. 5

**செ**த்துறு நியாயமத வட்டையர் மனத்தையும்வை சேடிக ரகந்தை தனையும்
புத்தருறு புத்தியையு மாருகத ரங்குண புடத்தையு மிகுந்த புரிவான்
மத்தமுறு மைந்திரவு நூனடையர் மாலுடை மகானெனுமொர் மாயை யினையுஞ்
சித்திபெறு வாரென மிழற்றுமுது நூலெனது தெய்வமென வந்த பரமே. 6

**வா**லருளில் சாங்கியர் பதஞ்சலியி னூனெறியர் மாயைகொள் விவர்த்த முடிவுக்
கோலநெறி யோர்புருட தத்துவமு மாவிரதர் கோணையறு வித்தை யினையும்
மாலணவு பாசுபதர் மாவசுசி மாயையு மரித்தபி னடுப்ப ரெனவே
நூலறையு மென்னறி விருந்தறிவ தாவிரியு நூனமி லதீத பரமே. 7

---

3. **சாருவகர்** - சாருவாகர். **விதுவாதிகள்** = சந்திரவாதிகள்; தத்தங் கொள்கைகளை நிறுத்திப் பேசுவோர் ‘வாதிகள்’ எனப்படுவர்.

4. **களாமுகர்** - காளாமுகர்; இவர்மதம், சடை எலும்பணிதன் முதலிய கொள்கைத்து என்ப. **மீமருவல்** = ஆகாயத்தைப் பொருந்துதல்.

6. நியாயமதவட்டையர் செத்து உறுமனத்தையும் எனக்கூட்டுக. **நியாயம்** = தருக்கநூல். **வட்டை** = வழி.

7. **கோணையறு வித்தை** = அழிவுடைய வித்தை = சிறப்பில்லாத வித்தை. இஃது அசுத்த மாயையிலுள்ள வித்தியாதத்துவம். இதனைக் கதியாக

**அ**ன்புறு கபாலிக ளசுத்தமுறு மாயையி னதோபுடமு மாசண வுறா
நன்கணவு வாமமத தந்திரர்கள் சத்தியையு நாரநிமிர் சைவ ரெவரும்
இன்பென மதித்தமுறை யாகநறு மாயைநிலை யேயொரு சிவத்து வமுமே
புன்கணற வெய்துவ ரெனும்பழைய நூனனி புரந்தெனை யளாவு பரமே. 8

**செ**ப்பிய மதத்தவர்க ளவ்வவெலை காணினவை சேருவ ரலா ரடைகிலார்
அப்படி யடைந்தகதி சத்திய மிலாதயன மண்ணபர முத்தி யுணர்வாம்
முப்பதுமொ ராறுமிறை யன்றென வறிந்துதளி மூலமல முந்தளி யுனைத்
துப்புட னளாவுபர முத்திபெறு வாரருள் சுரந்தணவு வார்கள் பரமே. 9

**த**த்துவம் விளக்குமத மத்தனையு முற்றசிவ தத்துவமொ ரைந்து மறையா
அத்தனரு ணூலறையு மாதலி னெலாருமவை யண்ணவத ரின்றி ழிவரால்
சித்தருள் விளக்கமுடனைந்தினு முயர்ந்துறுமொர் சித்தமுத முத்தி தருவாய்
முத்தனனு பூதிமுறை தந்தவனை யாளுமருண் மூலகுக கந்த பரமே. 10